# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.538/2024
Sessions)

( Prosecution P.W.2
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | சண்முகசிகாமணி | -- | |
| Father's Name | பழனிச்சாமி | Calling | சர்வீஸ் அட்வைசர் |
| Village | சத்திரப்பட்டி | Religion | |
| Taluk | இராஜபாளையம் | Age | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025.

**Accused absent. Petition filed.**

**முதல் விசாரணை**

நான் இராஜபாளையம் தாலுகா, சத்திரப்பட்டி புதுத்தெருவில் குடியிருந்து வருகிறேன். திருவில்லிபுத்தூரிலிருந்து இராஜபாளையம் செல்லும் ரோட்டில் பழைய RTO அலுவலகம் அருகில் உள்ள ABT மாருதி கார் கம்பெனியில் சர்வீஸ் அட்வைசராக வேலை பார்த்து வருகிறேன். என்னுடன் அ.சா.1 மணிராஜாவும், சர்வீஸ் அட்வைசராக வேலை பார்த்து வருகிறார். 30.08.2023ம் தேதி காலை 08.30 மணியளவில் TN84A1738 என்ற பதிவெண் கொண்ட மணிராஜாவுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை அவர் ஓட்டிக்கொண்டும், அவருக்குப் பின்னால் நான் அமர்ந்து கொண்டும் சுமார் 50 மீட்டர் தொலைவில் குருமூர்த்தியும் அவருக்குச் சொந்தமான TN79A4488 என்ற பதிவெண் உள்ள இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டும் அவருக்குப்பின்னார் முத்துமணியும் அமர்ந்து கொண்டும் எங்கள் கம்பெனிக்கு வேலைக்குச் சென்று கொண்டிருந்தோம். நாங்கள் ரோட்டின் இடது ஓரமாக குண்டுசி மில் அருகில் உள்ள வளைவு பக்கம் சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு எதிர்த்தாற் போல் KL25L2829 என்ற பதிவெண் உள்ள பிரிசா கார் அதிவேகமாக வந்து வளைவில் திரும்பும்போது uncontrol ஆக வந்து குருமூர்த்தி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டது. குருமூர்த்தி ரோட்டின் முடிவில் அமைக்கப்பட்டிருந்த கம்பியைத் தாண்டி கீழே விழுந்துவிட்டார். முத்துமணியும் இந்த சம்பவத்தில் கீழே விழுந்துவிட்டார். நானும், மணிராஜாவும் பார்த்தபோது அவர்கள் இருவரும் அசைவற்று இருந்தார்கள். குருமூர்த்திக்கு உயிர்த்தளத்தில் காயம் ஏற்பட்டிருந்தது. முத்துமணிக்கு நெஞ்சு பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது. சம்பவத்தில்

காருக்கும் சேதம் ஏற்பட்டிருந்தது. அந்தக் காரை ஒரு பெண் ஓட்டி வந்தார். அவரை நான் அப்போது பார்த்தேன். நான் விசாரித்தபோது டிரைவர் சீட்டிற்கு இடதுபுறத்தில் அந்த பெண்ணின் கணவரும், காரின் பின்பகுதியில் அவருடைய அப்பாவும், அம்மாவும் வந்திருந்தனர் என்று தெரிந்து கொண்டேன். உடனடியாக நாங்கள் இந்த தகவலை எங்கள் கம்பெனிக்கு சொல்லிவிட்டு தனியார் ஆம்புலன்சிற்கு போன் செய்தோம். அதன்பிறகு அரசு மருத்துவமனையில் இருந்தும் ஆம்புலன்ஸ் வந்தது. அரசு மருத்துவமனையில் இருந்து வந்த ஆம்புலன்சில் காயம்பட்ட நபர்களை ஏற்றிக்கொண்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். குருமூர்த்தியையும், முத்துமணியையும் தனியார் ஆம்புலன்சில் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவத்தில் ஈடுபட்ட கார் கேரளாவில் இருந்து வந்தது என்றும், அந்த காரை ஓட்டி வந்த பெண்ணின் பெயர் மரினா வினிதா அச்சுமோன் என்றும் தெரிந்து கொண்டேன். காரில் வந்த மற்ற நபர்களின் பெயர்கள் எனக்குத் தெரியாது. அதன் பின்னர் நானும், மணிராஜாவும் வன்னியம்பட்டி காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு மணிராஜா புகார் மனு கொடுத்தார். நானும் அதில் சாட்சியாக கையொப்பம் செய்தேன். அவர் கொடுத்த புகார் மனு ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தின் போது காரை ஓட்டி வந்த பெண்ணைப் பார்த்தால் தற்போது என்னால் அடையாளம் காட்ட இயலும், ஆனால் இன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் ABT மாருதி சர்வீஸ் நிறுவனத்தில் வேலை பார்த்ததை காட்டக்கூடிய அடையாள அட்டையை போலிசாரிடம் கொடுத்துள்ளேன். நான் ABT மாருதி சர்வீஸ் நிறுவனத்தில் பணியாற்றவில்லை என்றும், எந்த அடையாள அட்டையும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் ABT நிறுவனத்தில் வேலை பார்த்தேனா என்று அங்குள்ள மேலாளரை விசாரித்தால் தான் தெரியும். நான் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண்ணை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். 50 மீ தூரத்தில் பின்தொடர்ந்து சென்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். இறந்தவர் ஓட்டிச்சென்ற ராயல் என்பீல்டு வாகனம் சங்கரன்கோவிலைச் சேர்ந்த வெங்கடேசபெருமாள் என்பவருக்குச் சொந்தமானது. மேலும், குருமூர்த்திக்கு விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் இல்லை. முத்துமணி என்பவர் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் 2, 3 காவலர்கள் வந்தார்கள். பொதுமக்கள் சுமார் 5 பேர் இருந்தார்கள். இறந்துபோனவரை தனியார் ஆம்புலன்சில் கொண்டு சென்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். மறுநாள் காவல் நிலையத்திற்கு செல்லும்போது போலிசார் எழுதி வைத்த புகார் மனுவில் நானும், அ.சா.1ம் கையெழுத்துப்போட்டோம் என்று சொன்னால் சரிதான். நான், சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல்விசாரணையில்

சொன்னது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**